# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். **061/ந/2018**

ஆணை எண். **85/2018**

நாள் : **28/03/2018**

திரு கே. தேவதாஸ்,
காந்தி நகர்,
சேலம். 1. – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையாளர்,
மேட்டூர் நகராட்சி,
மேட்டூர். – எதிர் மனுதாரர்

சேலம் மாவட்டம், அல்லக்குட்டை அஞ்சல், காந்தி நகர், மணி வில்லா, எண். 5, முகவரியில் வசிக்கும் திரு கே. தேவதாஸ் அவர்களின் 17.03.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 19.03.2018 அன்று பெறப்பட்டு, 61/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரர் தாக்கல் செய்த ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சேலம் மாவட்டம், அல்லக்குட்டை அஞ்சல், காந்தி நகர், மணி வில்லா, எண். 5, முகவரியில் வசிக்கும் திரு கே. தேவதாஸ் என்பவர், மேட்டூர் நகராட்சியில் இளநிலை உதவியாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றதாகவும் தான் பணியாற்றிய காலத்தில் நான்காவது ஊதியக் குழு தொகை மற்றும் தனது ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்ட சேமநலநிதிக்கான வட்டித் தொகை வழங்கக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. நகராட்சி நிர்வாக ஆணையர் தனது 29.02.2008 நாளிட்ட சுற்றறிக்கை எண்.9019/எல்3/2008 மற்றும் 10.04.2008 நாளிட்ட சுற்றறிக்கை எண்.16729/எல்3/2008–இல், ஓய்வு பெற்ற நகராட்சிப் பணியாளர்களுக்கு, பணியின் போது பிடித்தம் செய்யப்பட்ட சேமநல நிதிக்கான வட்டித் தொகையினை வழங்குவது குறித்து மேற்கொள்ளப் படவேண்டிய நடவடிக்கைக் குறித்த வழிகாட்டுதல்களை அறிவிக்கை செய்துள்ளார். எனவே, மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு, சேமநலநிதிக்கான வட்டித் தொகையினை வழங்கக்கோரும் மனுவினை உரிய ஆவணங்கள் மற்றும் தேவையான விவரங்களுடன் மேட்டூர் நகராட்சி ஆணையருக்கு மனுச் செய்யுமாறு முறையீட்டு மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

3. முறையீட்டு மனுதாரரிடமிருந்து பெறப்படும் / பெறப்பட்ட மனுவினை உரிய ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலனை செய்து, உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை இயக்குநரின் ஒப்புதலைப் பெற்று சேமநலநிதிக்கான வட்டித் தொகை மற்றும் 4–வது ஊதியக் குழு நிலுவைத் தொகையினை வழங்குவதற்கான நடவடிக்கையினை விரைந்து மேற்கொள்ளும்படி மேட்டூர் நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தியும் இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2018– ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், 28– ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு.கோ. தேவதாஸ்,
5. மணி வில்லா,
காந்தி நகர், அள்ளக்குட்டை அஞ்சல்,
சேலம் – 17.

2. நகராட்சி ஆணையாளர்,
மேட்டூர் நகராட்சி,
மேட்டூர்.

3. நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர்,
நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநரகம்,
சேலம் மாவட்டம்.

4. நகராட்சி நிர்வாக ஆணையர்,
நகராட்சி நிர்வாக ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை – 600 005.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி